தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 28.06.2013

### குறுவை சாகுபடி: வைகை அணையிலிருந்து ஜூலை 10-ல் தண்ணீர் திறப்பு?

மதுரை மாவட்டத்தில் இருபோக சாகுபடி பகுதிகளின் குறுவை சாகுபடிக்காக, வைகை அணையில் இருந்து ஜூலை 10-ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பெரியாறு - வைகை அணைகளின் மொத்த நீர் இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கன அடியைத் தாண்டும்போது, குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்படும். மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி, மதுரை வடக்கு தாலுகாவுக்கு உட்பட்ட 45 ஆயிரம் ஏக்கர் இதன்மூலம் பாசன வசதி பெறுகிறது.

குறுவை சாகுபடிக்காக ஜூன் 1-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம். கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், அணைக்கு நீர்வரத்து குறைவாகவே இருந்தது. இதனால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்த ஆண்டும் போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தால் ஜூன் 1-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை.

இப்போது பெரியாறு அணையில் இருந்து நீர்வரத்து இருப்பதால், வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. வியாழக்கிழமை நிலவரப்படி பெரியாறு - வைகை அணைகளின் மொத்த நீர் இருப்பு 4129 மில்லியன் கன அடியாக உள்ளது. இதையடுத்து, அணையில் இருந்து நீர் திறப்பது தொடர்பாக, நீரினைப் பயன்படுத்துவோர் சங்க நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

பொதுப்பணித் துறை பெரியாறு -வைகை பாசனத் திட்ட செயற்பொறியாளர்கள் தனபால், ரவிச்சந்திரன், வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை மற்றும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இரு அணைகளின் நீர் இருப்பு 4 ஆயிரம் கன அடியைத் தாண்டியுள்ளதால், ஜூலை 1-ஆம் தேதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தினர் வலியுறுத்தினர்.

பருவமழையைக் கருத்தில் கொண்டு ஜூலை 2-ஆவது வாரத்தில் தண்ணீர் திறப்பது பற்றி அதிகாரிகள் கருத்துக் கேட்டனர். ஜூலை 15-க்குப் பிறகு தண்ணீர் திறக்கும் பட்சத்தில் நெல் அறுவடை செய்யும்போது வடகிழக்கு பருவமழை வந்துவிடும். இதனால் நெல் சாகுபடி பாதிக்கும்.

ஆகவே, அதற்கு முன்பே திறந்துவிட வேண்டும் என்றனர். ஜூலை 10-ஆம் தேதி தண்ணீர் திறந்து விடுவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பலாம் என்றனர்.

அணையில் இருந்து தண்ணீர் திறப்பதற்கான கருத்துரு அனுப்புவதற்கும், நடவு முடிந்த பிறகு சுழற்சி முறையில் தண்ணீர் விடுவதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**நெல் ஆதரவு விலையை உயர்த்தியது மத்திய அரசு**



நெல் ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.60 ஆக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இதன் மூலம் ரூ.1310 வழங்கப்படும்.

புதுதில்லியில் கூடிய பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது. இதுதொடர்பாக அதிகார வட்டாரங்கள் கூறியதாவது: நாடு முழுவதும் பருவமழை பரவலாக பெய்து வரும் நிலையில்,

தற்போதைய காரீப் பருவத்தில் விவசாயிகள் அதிகளவு நெல் சாகுபடி செய்ய ஊக்குவிக்கும் வகையில் நெல் ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. நெல்லுக்கான ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.60 உயர்த்தப்பட்டுள்ளது.

பருப்பு வகைகளுக்கு ரூ.450-ம், எண்ணெய் வித்துக்களுக்கு ரூ.320-ம் குவிண்டாலுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. 2013-14 ஆண்டுக்கான காரீப் பருவ பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக நெல் விலை குவிண்டால் ரூ.1250-ல் இருந்து ரூ.1310-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதல் ரக நெல்லுக்கான விலை ரூ.65 உயர்த்தப்பட்டது. பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.3700-ல் இருந்து ரூ.4,000-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**மலைகளில் மரம் வளர்ப்போம்**

மூன்றாவது உலக யுத்தம் தண்ணீருக்காகத்தான் நடைபெறும்' என்று சொல்வதன் மூலம், யுத்தம் நடைபெறும் என்பதையும், அதற்கான காரணத்தையும் சேர்த்தே சொல்லி எச்சரிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் கர்நாடகத்தையும், கேரளத்தையும், ஆந்திரத்தையும் எதிர்த்துப் போராடிக் கொண்டே இருக்கும் நிலை, இனி எந்தக் காலத்திலும் மாறும் என்று நம்பினால் நாம் அறிவிலிகள்.

மழை பெய்தால் உபரி நீர் வரும், அதுஇல்லாவிட்டால் "எந்தத் தீர்ப்பு வந்தாலும்' தண்ணீர் வரவே வராது!

எனவே, மாற்று ஏற்பாட்டைக் கூடவே யோசிக்காவிட்டால், தண்ணீருக்கான சிக்கலையும், போராட்டத்தையும் நாம் தவிர்க்கவே முடியாது.

மழைக்காலம் நெருங்குவதால் எல்லா வீடுகளிலும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தச் சொல்கிறது அரசு.

இத்திட்டம் ஒரு வகையில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் நல்ல பணி, மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான். அதேநேரத்தில் மாநிலம் முழுவதும் சிறிதும், பெரிதுமான மலைகள் நம் கவனத்தில் இருந்து விலகியே இருக்கின்றன.

சாலையோரங்களில் மரங்களை நடும் நிகழ்ச்சிகள் ஏராளமாக நடைபெறுகின்றன. ஆனால், பல மலைகள் வறண்டு கிடக்கின்றன. ஏற்கெனவே நீர்ப்பிடிப்புப் பகுதிகளாக இருந்த இவை பரிதாபமாகக் காட்சியளிக்கின்றன. ஏன் இவற்றைக் கவனிக்கக் கூடாது?

மலைகளிலிருந்து சிற்றாறுகளும், சுனைகளும் பிறக்கின்றன. பெரும்பாலான இடங்களில் அவை காய்ந்து, வற்றியுள்ளன. அருவிகள் இல்லாத மலைகளே இல்லை. நீர்ப்பிடிப்பு இல்லாததால் பெரும்பாலானவை வறண்டுவிட்டன.

வறட்சியான பெரம்பலூர் மாவட்டத்திலும் ஓர் அருவி இருக்கிறது. சுற்றிலும் மலைகளைக் கொண்ட இயற்கை அற்புதமாக மணப்பாறை அருகே பொன்னணியாறு அணை இருக்கிறது; இப்போது காய்ந்துபோய் காட்சியளிக்கிறது.

ஒட்டுமொத்தமாக மாநிலம் முழுவதும் உள்ள சிறிதும் - பெரிதுமான மலைகளை ஆய்வுசெய்து பெருந்திட்டம் ஒன்றை அரசு தயாரிக்க வேண்டும். உள்ளூர் மக்களின் உதவியுடன் அந்த மலைகளில் மரங்களை நட்டு வளர்க்க வேண்டும். அந்த மரங்கள் அம் மக்களுக்கும் சமுதாயத்துக்கும் குறுகிய கால, நீண்டகாலப் பயன்களை அளிப்பதாகவும் இருந்தால் சிறப்பு. பழ மரங்கள், மருத்துவத்துக்குப் பயன்படும் மூலிகை மரங்கள், எரிபொருளாகப் பயன்படக்கூடிய மரங்கள், கப்பல் கட்டுதல் போன்ற கனரக உபயோகத்துக்கான மரங்கள், பறவைகள் கூடு கட்டி வசிப்பதற்கானவை என்று எல்லாவித மரங்களையும் திட்டமிட்டு வளர்க்கலாம்.

இதைச் செய்துவிட்டால் நிச்சயம் அடுத்த நூறாண்டுகளுக்குத் தேவையான பெரும் தண்ணீர் ஊற்றுகளை நாம் உருவாக்க முடியும்.

ஏரிகளில் இருந்து குடிநீர்த் திட்டம், ஆறுகளில் இருந்து திட்டம் என்ற நிலை மாறி, மலைகளில் இருந்து வரும் அருவிகளில் இருந்தும், சிற்றாறுகளில் இருந்தும் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி அருகேயுள்ள மாவட்டங்களுக்குத் தரும் நிலை வரும். இந்தக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அவசியமான பணி இது.

**தமிழகத்தில் இன்று மழை வாய்ப்பு**

வட தமிழக மாவட்டங்களில் இன்று பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் தமிழகத்தின் ஒ ரு சில இடங்களிலும் மழை பெய்யக் கூடும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கோவை மாவட்டம் சின்னக் கல்லாறு, வால்பாறை, பொள்ளாச்சி, சேலம், நீலகிரி, ஈரோடு, நாமக்கல் மாவட்டம் மங்களாபுரம், பெரியாறு அணை, செங்கோட்டை, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி, திருப்பத்தூர், வாழப்பாடி உள்ளிட்ட இடங்களில் புதன்கிழமை மாலையிலிருந்து பலத்த மழை பெய்து வருகிறது.

அதிகபட்சமாக சின்னக்கல்லாறில் 60 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சேலத்தில் 50 மில்லி மீட்டரும், வால்பாறை, கோபிசெட்டிபாளையம், ஆத்தூர் உள்ளிட்ட இடங்களில் 40 மில்லி மீட்டரும் மழை பதிவாகியது.

வானிலை முன்னறிவிப்பு: காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், கோவை, திருப்பூர், நீலகிரி, கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், கரூர், திருச்சி உள்ளிட்ட இடங்களில் வெள்ளிக்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும். சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பெரியாறு, அமராவதி, பவானிசாகர் அணைகளில் இன்று தண்ணீர் திறப்பு**

பெரியாறு, அமராவதி மற்றும் பவானிசாகர் அணைகளில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறக்கப்படவுள்ளது.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல் போக சாகுபடிக்காக பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுமாறு

விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இதையடுத்து, வெள்ளிக்கிழமைமுதல் பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும்.

இதன் மூலம் தேனி மாவட்டத்தில் தேனி, உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் வட்டங்களிலுள்ள 14 ஆயிரத்து 707 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

திருப்பூர் மாவட்டத்திலுள்ள அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கக் கோரி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதையேற்று, வெள்ளிக்கிழமைமுதல் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 7 ஆயிரத்து 520 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி கால்வாய்களில் முதல் போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடக் கோரிக்கைகள் வந்துள்ளன. இதையடுத்து, பவானிசாகர் அணையில் இருந்து வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதனால், அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி கால்வாய்களின் கீழுள்ள 24 ஆயிரத்து 504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

**நெல் ஆதரவு விலையை உயர்த்தியது மத்திய அரசு**

நெல் ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.60 ஆக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இதன் மூலம் ரூ.1310 வழங்கப்படும்.

புதுதில்லியில் கூடிய பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது. இதுதொடர்பாக அதிகார வட்டாரங்கள் கூறியதாவது: நாடு முழுவதும் பருவமழை பரவலாக பெய்து வரும் நிலையில், தற்போதைய காரீப் பருவத்தில் விவசாயிகள் அதிகளவு நெல் சாகுபடி செய்ய ஊக்குவிக்கும் வகையில் நெல் ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. நெல்லுக்கான ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.60 உயர்த்தப்பட்டுள்ளது.

பருப்பு வகைகளுக்கு ரூ.450-ம், எண்ணெய் வித்துக்களுக்கு ரூ.320-ம் குவிண்டாலுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. 2013-14 ஆண்டுக்கான காரீப் பருவ பயிர்களுக்கான குறைந்தபட்ச

ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக நெல் விலை குவிண்டால் ரூ.1250-ல் இருந்து ரூ.1310-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதல் ரக நெல்லுக்கான விலை ரூ.65 உயர்த்தப்பட்டது. பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.3700-ல் இருந்து ரூ.4,000-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**பாவூர்சத்திரம் சந்தையில் காய்கனி விலை சரிவு**

திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் தினசரி சந்தையில் உள்ளூர் பகுதியிலிருந்து வரத்து அதிகரித்ததால் காய்கனி விலை வியாழக்கிழமை வெகுவாகக் குறைந்தது.

பாவூர்சத்திரம் தினசரி சந்தைக்கு சிற்றாறு பாசனப் பகுதியான கீழப்பாவூர் வட்டாரத்திலிருந்தும், வெளிச்சந்தையான ஒட்டன்சத்திரம் சந்தையிலிருந்தும் காய்கனிகள் விற்பனைக்கு கொண்டுவரப்படுகின்றன. கடந்த பல மாதமாக காய்கனிகளின் விலை ஏறுமுகத்தில் இருந்தது. இப்போது உள்ளூர் பகுதிகளிலிருந்து காய்கனி வரத்து அதிகரித்ததால் விலை சரியத் தொடங்கியுள்ளது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்புவரை ரூ.75-க்கு விற்பனையான ஒரு கிலோ வெங்காயம் தற்போது ரூ.50-க்கும், ரூ.55-க்கு விற்பனையான தக்காளி ரூ.35-க்கும், ரூ.24-க்கு விற்பனையான வெண்டைக்காய் ரூ.13-க்கும், ரூ.20-க்கு விற்பனையான புடலங்காய் ரூ.13-க்கும், ரூ.30-க்கு விற்பனையான மல்லி இலை ரூ.10-க்கும், ரூ.18-க்கு விற்பனையான கத்தரிக்காய் ரூ.15-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வரும் மாதங்களில் முகூர்த்த நாள்கள் குறைவாக இருப்பதாலும், உள்ளூர் பகுதிகளிலிருந்து பல்வேறு காய்கனிகள் பெருமளவில் சந்தைக்கு கொண்டுவரப்படும் நிலையில், காய்கனிகள் விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது என பாவூர்சத்திரம் தினசரி சந்தை காய்கனி வியாபாரி கே.பி.முருகன் தெரிவித்தார்.

**அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை இல்லாததால் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து காணப்பட்டது. வியாழக்கிழமை பாபநாசம் அணையின் நீர்மட்டம் 113 அடியாக இருந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீடித்த மழையால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது. 84 அடி கொள்ளளவு கொண்ட கடனாநதி, ராமநதி அணைகள் நிரம்பின. பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

வியாழக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 113 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2728.24 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து பாசனத்துக்காக 1155 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 131.63 அடியாக இருந்தது.

மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.95 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 311 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 275 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 83 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 82 அடியாகவும் இருந்தது.

நீர்வரத்து குறைந்தது: கடந்த 2 தினங்களாக நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை இல்லை. இதையடுத்து அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து காணப்பட்டது. இருப்பினும் பாபநாசம் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவிகளில் நீர்வரத்து அதிகமாக இருந்தது. வியாழக்கிழமை மணிமுத்தாறு, பாபநாசம் அருவிகளில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகமாக இருந்தது.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், செய்துங்கநல்லூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் அனைவருக்கும் முழு ஊதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றியச் செயலர் நம்பிராஜன் தலைமை வகித்தார். ஜனநாயக மாதர் சங்கத் தலைவி குணேஸ்வரி, ஜனநாயக வாலிபர் சங்கச் செயலர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு விவசாய சங்க மாவட்டச் செயலர் பெருமாள், விவசாய சங்க மாவட்ட துணைச் செயலர்

மாரியப்பன், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட பொருளாளர் அப்பாக்குட்டி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 17.45 அடியாக இருந்தது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 17.45 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 5,881 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 870 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் நாளை தொடங்குகிறது**

அரியலூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை முதல் (ஜூன் 27) ஜூலை 3 ஆம் தேதி வரை உழவர் பாதுகாப்பு திட்ட முகாம்கள் நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாய கூலி தொழிலாளர்கள் ஆகியோருக்கு கல்வி, திருமண, முதியோர், நலிவடைந்த விவசாய கூலி தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய தொகை, விபத்து நிவாரணத் தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற உழவர் அடையாள அட்டை இல்லாத நபர்கள் விண்ணப்பித்து பதிவு செய்துகொள்ளலாம்.

அரியலூர் வட்டத்தில் உள்ள கீழப்பழூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் வியாழக்கிழமை (ஜூன் 27), 28 ஆம் தேதி திருமானூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், 29 ஆம் தேதி ஏலாக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியிலும், உடையார்பாளையம் வட்டம், குண்டவெளி கிராம நிர்வாக அலுவலகத்தில் வியாழக்கிழமை (ஜூன் 27), 28 ஆம் தேதி தா.பழூர் கிராம நிர்வாக அலுவலகத்திலும், ஜூலை 1 ஆம் தேதி சுத்தமல்லி கிராம நிர்வாக அலுவலகத்திலும், 2 ஆம் தேதி உடையார்பாளையம் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திலும், 3 ஆம் தேதி ஜயங்கொண்டம் கிராம நிர்வாக அலுவலர்

அலுவலகத்திலும், செந்துறை வட்டம், ஆர்.எஸ்.மாத்தூரில் வியாழக்கிழமை (ஜூன் 27) வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திலும், 28 ஆம் தேதி பொன்பரப்பி சமுதாயக் கூடத்திலும், 29 ஆம் தேதி செந்துறை அரசு மேல்நிலைப் பள்ளியிலும் உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெறுகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட கிராமங்களை சேர்ந்த தகுதியுள்ள நபர்கள் முகாமில் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏற பயிற்சி**

கிருஷ்ணகிரி அருகே விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இதுகுறித்து எலுமிச்சங்கிரி டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தென்னை வளர்ச்சி வாரியத்துடன் இணைந்து தென்னை மரம் ஏறும் 6 நாள் பயிற்சி வேளாண்மை அறிவியல் மையத்தில் வழங்கப்படவுள்ளது.

100 நபர்களுக்கு 5 குழுக்களாகப் பிரித்து பயிற்சி வழங்கப்படும். இதில் பங்கேற்பவர்களுக்கு வயது வரம்பு 45-க்குள்ளும், 8-ஆம் வகுப்பு தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும். தகுதியுடைய பெண்களும் கலந்து கொள்ளலாம்.

இந்த 6 நாள் பயிற்சியில் கலந்து கொள்ளும் நபர்களுக்கு தங்கும் வசதி, உணவு, பயிற்சி முடிவில் சான்றிதழ், தென்னை வளர்ச்சி வாரியத்தால் ஒரு லட்சம் ரூபாய் காப்பீடு, தென்னை மரம் ஏறும் கருவியும் கட்டணமின்றி வழங்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புபவர்கள் ஜூலை 12-ஆம் தேதிக்குள் வேளாண்மை அறிவியல் மையத்தை நேரடியாக அணுகலாம். அல்லது 04343-296039, 9443796968 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு விவரங்களை பதிவு செய்துக் கொள்ளலாம் என்றார் அவர்.

**சிறு விவசாயிகள் நலனுக்காக ரூ. 200 கோடி ஒதுக்கீடு**

சிறு விவசாயிகளின் நலனுக்காக மத்திய வர்த்தகத் துறை சார்பில் ரூ. 200 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக, தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சங்கப் பிரதிநிதிகள் கூட்டம், குன்னூரில் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் தென்னிந்திய தேயிலை வாரிய உப தலைவர் மற்றும் விவசாயிகள் சங்க துணைத் தலைவர் கோ.சி. பேபி கூறியது:

இந்திய சிறு விவசாயிகளின் நலனுக்காக மத்திய வர்த்தகத் துறை சார்பில் ரூ.200 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக சிறு விவசாயிகளுக்கு உபகரணங்கள், மூலப்பொருள்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் தேயிலை வாரியம் செய்து கொடுக்கும்.

கடந்த நிதியாண்டில் தாழ்த்தப்பட்ட சிறு விவசாயிகளின் நலனுக்காக, மத்திய அரசு ரூ.9.50 கோடி நிதி ஒதுக்கியது. இதனை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மானியத்துடன் வழங்கும் வாகனங்கள், இலை சேகரிக்கும் கிடங்கு, உரம், மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான தேயிலை தொழிற்சாலை அமைக்க ரூ.25 லட்சம் மானியம் உள்ளிட்டவற்றுக்காக மத்திய அரசு வழங்கியது.

இதில், ரூ. 2 கோடியை பயனாளிகள் இல்லை என்று கூறி, தேயிலை வாரியம் திருப்பி அனுப்பிவிட்டது. இந்தச் செயல் கண்டனத்திற்குரியது. இதுகுறித்து, இந்திய தேயிலை வாரியத் தலைவர் உத்தரவுப்படி விசாரணை நடத்தப்படவுள்ளது. நடப்பாண்டில், தாழ்த்தப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளுக்கு மானியமாக மத்திய அரசு வழங்கியுள்ள ரூ. 200 கோடியை தேயிலை வாரியம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

மேற்படி நிதி கிடைக்க உறுதுணையாக இருந்த மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், காஞ்சிபுரம் எம்.பி. விஸ்வநாதன் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இதில் அகில இந்திய தேயிலை சிறு விவசாயிகள் கூட்டமைப்பு மற்றும் தேயிலை வாரிய உறுப்பினர் சமீர் பாய், தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ராமு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**விதை நெல் உற்பத்தி குறைவு; விலை உயர்த்த முடிவு**

கோபியில் விதை நெல் உற்பத்தி குறைவால் கிலோ ரூ.35-க்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் சார்பில் 200 டன் விதை நெல் (100 ஏக்கரில்) ஆர்டர் அளித்ததில் 30 டன் கிடைத்துள்ளதால், விதை நெல் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பவானிசாகர் அணை நீர்மட்டம் சென்ற இரண்டு ஆண்டுகளாக குறைவாக காணப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 25 அடி வரை குறைந்ததால், குடிநீர் தேவைக்குக்கூட அணை திறக்க முடியாத நிலை ஏற்பட்டது.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் சென்ற ஆண்டு முதல் போகத்தில் மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டது. முதல் போக நெல் அறுவடை பணி முடிந்த கையோடு, அடுத்த போகத்துக்கான பணி மும்முரமாக நடக்கும். பருவமழை பொய்த்ததால் 2-ஆம் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

தற்போது அணைக்கு நீர் வரத்து உள்ளதால் 53 அடியை தாண்டியுள்ளது. அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதையடுத்து, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் ஒரு புறமும், எல்.பி.பி., பாசன விவசாயிகள் மறுபுறமும் தண்ணீர் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மாவட்ட பாசனப் பகுதிக்கு கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில் இருந்து விதை நெல் விநியோகம் செய்யப்படுகிறது. நடப்பாண்டுக்கு விதை நெல் தேவையைப் பூர்த்தி செய்ய, மேட்டூர் பகுதியில் 100 ஏக்கரில் விதை நெல் தயார் செய்யப்பட்டன.

தண்ணீர் தட்டுப்பாட்டால் விதை நெல் பதராக மாறியது. இதனால், 30 டன் விதை நெல் மட்டுமே கிடைத்துள்ளது. பற்றாகுறை காரணமாக கிலோ ரூ.35-க்கு விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

நெல் பாசனம் மூலமாக நெல் நடவு செய்தால், மூன்றரை ஏக்கருக்கு 35 பொதி கிடைக்கும். போர்வெல் பாசனத்தில் நடவு செய்ததால், 15 முதல் 20 பொதி நெல் விளைச்சலாகி இருக்கும்.

கடந்த ஆண்டு ஏ.டி.டி.ஆர்.45 ரக விதை நெல், கிலோ ரூ.23-க்கு விற்கப்பட்டது. நடப்பாண்டு ரூ.35-க்கு விற்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 57.20 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 57.20 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 9,928 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 300 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 6.38 டி.எம்.சி.

**முதல்வருக்கு விதை உற்பத்தியாளர்கள் சங்கம் நன்றி**

வேளாண்மைத் துறையை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ள முதல்வருக்கு தமிழ்நாடு விதை உற்பத்தியாளர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தாராபுரத்தில் சங்கத்தின் மாநிலச் செயலர் சி. காளிதாஸ் நிருபர்களிடம் வியாழக்கிழமை கூறியது:

வேளாண்துறையின் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் என சங்கம் சார்பில் மனு அளிக்கப்பட்டது. இதைப் பரிசீலித்த முதல்வர், மூன்று விதைசான்று அலுவலர் பணியிடங்களை நிரப்பினார்.

தென்மேற்கு பருவமழை உரியபட்டத்தில் துவங்கியுள்ளதால், குறுவை பட்டத்தில் கர்நாடக அணைகளில் இருந்து பெற வேண்டிய தண்ணீரை பெற தமிழக அரசு எடுக்கும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு அனைத்து விவசாயிகளும், விதை

உற்பத்தியாளர்களும் துணை நிற்க வேண்டும். கடந்த ஆண்டு உற்பத்தியான 83 ஆயிரம் மெட்ரிக் டன் சான்று விதை உற்பத்தி, நடப்பு நிதியாண்டில் உயர வாய்ப்புள்ளது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விதை உற்பத்திக்கு 14 சதவீதமாக இருந்த வட்டி தற்போது 11.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதை விதை உற்பத்தியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விதை உற்பத்தி நிலையங்களுக்கு ஜெனரேட்டர்களை மானிய விலையில் வழங்க வேண்டும் என்றார்.

**பெ.நா.பாளையம் பேரூராட்சி மக்கள் இயற்கை உரம் தயாரிக்க ஊக்குவிப்பு**

பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி நிர்வாகம் பொதுமக்களே தங்களது வீடுகளில் இயற்கை உரம் தயாரிப்பதை ஊக்குவிக்கும் வகையில், தன்னார்வலர்களுக்கு "ஹேண்ட் இன் ஹெண்ட்' என்ற அமைப்பின் மூலமாக இயற்கை உர மண்பானைகளை இலவசமாக வழங்கியுள்ளது.

இந்த அமைப்பு, மட்கும் மற்றும் மட்காத பொருள்களைப் பிரித்து அக் கழிவிலிருந்து பயனுள்ள பொருள்களைத் தயாரிக்கும் திட்டத்தை இப் பேரூராட்சியில் செயல்படுத்துகிறது. கடந்த ஆண்டு வீடுகளுக்கே நேரடியாகச் சென்று குப்பையைப் பெறும் திட்டத்தை செயல்படுத்தியது. இப்போது, பொதுமக்களே தங்களது வீடுகளில் உருவாகும் காய்கறிக் கழிவைக் கொண்டு இயற்கை உரம் தயாரிக்கும் வகையில் 3 மண்பானை உபகரணங்களை இலவசமாக வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக 45 நாள்களில் சிறந்த இயற்கை உரத்தை தயாரித்துப் பயன்படுத்த இயலும்.

இத் திட்ட தன்னார்வப் பயனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி பேரூராட்சி அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. செயல் அலுவலர் துவாரகநாத் சிங் முன்னிலை வகித்தார். பேரூராட்சித் தலைவர் பி.ஆர்.ஜி.அருண்குமார் தலைமை வகித்து உபகரணங்களை வழங்கினார்.

துணைத் தலைவர் சந்திரன், கவுன்சிலர்கள் குணசேகரன், சுப்பிரமணியன், திட்ட ஒருங்கிணைப்பாளர் ரவீந்திரன், உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர் விமல்குமார், மேற்பார்வையாளர் சுரேஷ், குப்புராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**கமுதியில் மழை**

கமுதியில் வியாழக்கிழமை மாலை, குறைந்த அளவு, மழை பெய்தது.

மழையால் வெப்பத்தின் கடுமை குறைந்தது. பசும்பொன், முதுகுளத்தூர் பகுதியிலும் மழை பெய்துள்ளது.

ஆனால் இந்த மழையால் விவசாயத்துக்குப் பயன்இல்லை என்றும், தொடர்ந்து அதிக மழை பெய்தால்தான், விவசாயத்தை தொடங்க முடியும் என்றும் விவசாயிகள் கூறினர்.

**பெரியாறு அணையிலிருந்து இன்று பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் வியாழக்கிழமை 123.28 அடியை எட்டிய நிலையில், தேனி மாவட்டத்தில் முதல்போக நெல் சாகுபடிக்கு அணையில் இருந்து வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

முல்லைப் பெரியாறு அணை தண்ணீர் மூலம், தேனி மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 2 போக நெல் சாகுபடி நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 1 ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 112 அடியாக உள்ள நிலையில், முதல்போக நெல் சாகுபடிக்கு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும்.

கடந்த ஆண்டு அணை நீர்மட்டம் குறைவாக இருந்ததால், ஜூன் 25 ஆம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த ஆண்டும், பெரியாறு அணை நீர்ப்பிடிப்புப் பகுதியில் போதிய மழை இல்லாததால், ஜூன் 1 ஆம் தேதி அணை நீர்மட்டம் 112 அடிக்கும் குறைவாக இருந்தது.

முதல் போக நெல் சாகுபடிக்கு கடைமடை ஆயக்கட்டு வரை தட்டுப்பாடின்றி தண்ணீர் கிடைப்பதற்காக, அணை நீர்மட்டம் 117 அடி உயர்ந்த பிறகு அணையில் இருந்து தண்ணீர் திறக்க, பொதுப்பணித் துறை அதிகாரிகள் முடிவு செய்திருந்தனர்.

இந்நிலையில், குடிநீர்த் திட்டங்களுக்காக அணையில் இருந்து குறைந்த அளவு மட்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

கடந்த சில நாள்களாக பெரியாறு அணை நீர்ப் பிடிப்புப் பகுதியில் கனமழை பெய்து வரும் நிலையில், ஜூன் 16 ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 115 அடியை எட்டியது. பின்னர், ஜூன் 18 ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 117 அடியை எட்டியதை அடுத்து, அணையில் இருந்து விநாடிக்கு 800 கனஅடி வரை தண்ணீர் திறந்து விடப்பட்டது.

தொடர்ந்து பெய்து வரும் மழையால், அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது. இந்நிலையில், அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

திறந்து விடப்படும் தண்ணீரைப் பயன்படுத்தி, கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் வயல்களில் நெல் நாற்று நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. சின்னமனூர், வீரபாண்டி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நாற்றங்கால் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பெரியாறு அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 123.28 அடியாக இருந்த நிலையில், அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 1,372 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணைக்கு நீர்வரத்து 4,335 கன அடியாக இருந்தது. பெரியாறு அணை நீர்ப் பிடிப்புப் பகுதியில் 24.6 மி.மீ., தேக்கடியில் 18 மி.மீ., மழை பெய்துள்ளது.

இந்த நிலையில், தேனி மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடிக்கு வெள்ளிக்கிழமை பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என்றும், அணையில் போதிய தண்ணீர் இருப்பு உள்ளதாலும், அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், இந்த ஆண்டு குடிநீர் மற்றும் பாசனத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு இல்லை என்றும், பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நிலத்தடி நீர்மட்டம் உயர மழைநீர் சேகரிப்பு அவசியம்**

நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு, அனைவரும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை செயல்படுத்த முன்வர வேண்டும், என குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் பிரித்தியா தேவி அப்பன் முன்னிலை வகித்தார். ஆட்சியர் ந. வெங்கடாசலம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்தும், நிலத்தடி நீரை சேமிப்பது குறித்தும் அதிகாரிகள் மற்றும் குடிநீர் வாரியப் பொறியாளர்கள் விளக்கம் அளித்தனர். அப்போது அவர்கள் தெரிவித்தது:

நீரின் தேவை அதிகரித்துள்ள நிலையில், நிலத்தடி நீர்மட்டத்தின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. மாவட்டத்தில், குஜிலியம்பாறை, தொப்பம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 1200 அடிக்கு கீழே உள்ளது.

எதிர்காலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படாத வகையில், தற்போது நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள், ஊரணி மேம்பாடு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 2,500 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, பொதுமக்களும் நீரின் தேவையை உணர்ந்து, அரசின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும். குறிப்பாக, மழை நீர் சேகரிப்புத் திட்டத்தினை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

மழை நீரைச் சேகரிக்கும் வகையில், மொட்டை மாடி, கசிவு நீர்க் குழிகள் முறை, துளையுள்ள கசிவு நீர்க் குழிகள் முறை, கசிவு நீர்ப் படுகை முறை, நீரூட்டல் கிணறு முறை (குறைந்த விட்டம், குறைந்த ஆழம், பெரிய விட்டம், அதிக ஆழம்) முறைகள் மூலம் மழைநீரை சேகரிக்கலாம் என, குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, கிராம ஊராட்சிகளில் உள்ள நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகளின் பராமரிப்புக்கான தகவல் கையேட்டினை, ஆட்சியர் ந. வெங்கடாசலம் ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கினார்.

கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் மு.ச. பாண்டியராஜன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவிப் பொறியாளர் பி. மாரியப்பன்(திருச்சி மண்டலம்), துணை நிலநீர் வல்லுநர் ஆர். சீனிவாசன், நிர்வாகப் பொறியாளர் கோ. வெங்கடேஸ்வரன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

**குறுவை சாகுபடி: வைகை அணையிலிருந்து ஜூலை 10இல் தண்ணீர் திறப்பு**

மதுரை மாவட்டத்தில் இருபோக சாகுபடி பகுதிகளின் குறுவை சாகுபடிக்காக, வைகை அணையில் இருந்து ஜூலை 10 ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பெரியாறு - வைகை அணைகளின் மொத்த நீர் இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கன அடியைத் தாண்டும்போது, குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்படும். மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி, மதுரை வடக்கு தாலுகாவுக்கு உட்பட்ட 45 ஆயிரம் ஏக்கர் இதன்மூலம் பாசன வசதி பெறும். குறுவை சாகுபடிக்காக ஜூன் 1 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம். கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை சரியாகக் கிடைக்காததால், அணைக்கு நீர்வரத்து குறைவாகவே இருந்தது. இதனால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்த ஆண்டும் போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தால் ஜூன் 1 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை.

இப்போது பெரியாறு அணையில் இருந்து நீர்வரத்து இருப்பதால், வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. வியாழக்கிழமை (ஜூன் 27) நிலவரப்படி பெரியாறு - வைகை அணைகளின் மொத்த நீர் இருப்பு 4129 மில்லியன் கன அடியாக உள்ளது. இதையடுத்து, அணையில் இருந்து நீர் திறப்பது தொடர்பாக நீரினைப் பயன்படுத்துவோர் சங்க நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. பொதுப்பணித் துறை பெரியாறு -வைகை பாசனத் திட்ட செயற்பொறியாளர்கள் தனபால், ரவிச்சந்திரன், வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை மற்றும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இரு அணைகளின் நீர் இருப்பு 4 ஆயிரம் கன அடியைத் தாண்டியுள்ளதால், ஜூலை 1 ஆம் தேதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தினர் வலியுறுத்தினர்.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக திறக்கப்பட்ட தண்ணீர் பயன்படாமல் போய்விட்டது என்றும், இந்த ஆண்டு அத்தகைய நிலை ஏற்படக் கூடாது என்றும் குறிப்பிட்டனர். எதிர்நோக்கும் பருவமழையைக் கருத்தில் கொண்டு ஜூலை 2 ஆவது வாரத்தில் தண்ணீர் திறப்பது பற்றி அதிகாரிகள் கருத்துக் கேட்டனர்.

ஜூலை 15-க்குப் பிறகு தண்ணீர் திறக்கும் பட்சத்தில் நெல் அறுவடை செய்யும்போது வடகிழக்கு பருவமழை வந்துவிடும். இதனால் நெல் சாகுபடி பாதிக்கும். ஆகவே, அதற்கு முன்பே திறந்துவிட வேண்டும் என்றனர். ஜூலை 10 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடுவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பலாம் என்றனர்.

அணையில் இருந்து தண்ணீர் திறப்பதற்கான கருத்துரு அனுப்புவதற்கும், நடவு முடிந்த பிறகு சுழற்சி முறையில் தண்ணீர் விடுவதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மானியத்துடன் கூடிய சொட்டு நீர் பாசனம்:விவசாயிகளுக்கு ஆட்சியர் வேண்டுகோள்**

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் மானியத்துடன் கூடிய சொட்டு நீர் பாசனம் அமைக்க முன் வர வேண்டும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கூறினார்.

தோட்டக்கலைத் துறையின் சார்பில் தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கக் கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

இதில், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கோ. சுப்பிரமணியன் வரவேற்றார்.

கருத்தரங்கை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் பேசியது:

சிறு மற்றும் குறு விவசாயிகள் 100 சதவீத சொட்டு நீர்ப்பாசன மானிய திட்டத்திலும், இதர விவசாயிகள் 75 சதவீத மானியத் திட்டத்திலும் நுண்ணீர்ப் பாசனத்தை அதிக பரப்பளவில் அமைக்க முன் வர வேண்டும்.

சென்னைக்கு அருகில் திருவள்ளூர் மாவட்டம் உள்ளதால் தோட்டக்கலைப் பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்து வருவாயை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தோட்டக்கலை துணை இயக்குநர் நவநீதக்கண்ணன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியர் (தோட்டக்கலை) சதாசக்தி, தோட்டக்கலை உதவி இயக்குநர் அரவிந்தன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

தோட்டக் கலை அலுவலர் ஜெபக்குமாரி நன்றி கூறினார்.

**பசுந்தீவனம் பயிரிட ரூ. 3 ஆயிரம் மானியம்: ஆட்சியர்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உயர்ரக தீவனம் பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரம் மானியம் வழங்கப்பட உள்ளதாக ஆட்சியர் லி. சித்ரசேனன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர், வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின்கீழ், உயர்ரக தீவனப்பயிர் செய்வதற்கு 0.25 ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் மானியமாக வழங்கப்பட உள்ளது. இதில் கோ.3 மற்றும் கோ.4 வகையான தீவனப்பயிர்கள் பயிரிடலாம். மேலும் ரெயின்கன் நிறுவிடவும் அரசு மானியம் வழங்குகிறது. கால்நடை தீவனப்பயிர் அகத்திக்கீரை பயிரிடவும் அரசு உதவி செய்கிறது.

விவசாயி, தனது நிலத்தில் பம்பு செட் வசதி வைத்திருக்கிறார் என்றால், அவர் ஒரு ஏக்கர் வரை பயிரிடலாம். மின்சாரத்தால் இயங்கும் புல் நறுக்கும் கருவிக்கு 75 சதவீதம் அரசு மானியம் வழங்குகிறது. மேலும் கோ.3 மற்றும் கோ.4 வகையான தீவனப்பயிர் பயிரிடும் விவசாயிக்கு அகத்திக்கீரை தீவன வகை மரம் வளர்க்க நாற்றாங்கால் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

விண்ணப்பங்கள் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களிடம் நேரில் வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**சென்னையில் பரவலாக மழை**

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வியாழக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது. சுமார் 45 நிமிடங்களுக்கும் மேல் மழை நீடித்ததால் நகரின் பல இடங்களில் தண்ணீர் தேங்கி குளம் போல் காட்சியளித்தது.

தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் மற்றும் வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. ஆனால் சென்னையைப் பொருத்த வரை கோடை வெயிலின் தாக்கம் நீடித்து வந்தது.

கடந்த சில நாள்களாக சென்னையில் 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் பதிவானது. வியாழக்கிழமை பிற்பகல் வரை நகரில் வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருந்தது. வானிலை ஆய்வு மையத் தகவல்படி நகரில் 101 டிகிரி வெயில் பதிவாகியிருந்து. இந்த நிலையில் வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு மேல் வானில் கருமேகங்கள் சூழ்ந்து மேகமூட்டமாக காட்சியளித்தது. சுமார் 5 மணியளவில் தொடங்கிய மழை 45 நிமிடங்கள் நீடித்தது. இதன் காரணமாக பள்ளி, அலுவலகங்களிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்கள் அவதிக்குள்ளாயினர்.

எழும்பூர், கீழ்ப்பாக்கம், அம்பத்தூர், வேளச்சேரி, அண்ணாசாலை, கிண்டி, அண்ணாநகர், கோடம்பாக்கம், புரசைவாக்கம், வடபழனி, வளசரவாக்கம், சைதாப்பேட்டை, அடையாறு, நந்தனம், போரூர், கொளத்தூர், நுங்கம்பாக்கம், அமைந்தகரை, வில்லிவாக்கம், மயிலாப்பூர், திருவான்மியூர், பட்டினப்பாக்கம் உள்பட சென்னையின் பல்வேறு இடங்களில் மழை பெய்தது.

பல இடங்களில் சாலைகளில் மழை வெள்ளம் வடியாமல் தேங்கி நின்றதால் சில மணி நேரம் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது.

சென்னை மீனம்பாக்கத்தில் 2.7 மில்லி மீட்டரும், நுங்கம்பாக்கத்தில் 6.2 மில்லி மீட்டர் மழையும் பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**ஜூலை முதல் வாரத்தில் சென்னைக்கு கிருஷ்ணா நீர்**

கிருஷ்ணா நதி நீர் ஜூலை முதல் வாரத்தில் சென்னைக்கு வர வாய்ப்புள்ளதாக சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

அப்போது விநாடிக்கு 300-லிருந்து 400 கனஅடி தண்ணீர் சென்னை பூண்டி ஏரிக்கு வரும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரும் பட்சத்தில் அடுத்த மாதத்திலிருந்து குடிநீர் தட்டுப்பாடு குறைய வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து குடிநீர் வாரிய மேலாண் இயக்குநர் பி.சந்திரமோகன் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி:

குடிநீர் பற்றாக்குறை: பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம் மற்றும் வீராணம் ஆகிய ஏரிகளிலிருந்து குடிநீர் பெறப்பட்டு சென்னை நகரில் விநியோகிக்கப்படுகிறது. தற்போது அந்த ஏரிகளில் போதுமான அளவு நீர் இருப்பு இல்லை.

சென்னையின் குடிநீர் ஆதார ஏரிகளில் தற்போது 15 சதவீதம் மட்டுமே நீர் இருப்பு உள்ளது. மேலும் கிருஷ்ணா ஆற்றின் குறுக்கே மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் பராமரிப்புப் பணிகள் காரணமாக கடந்த ஏப்ரல் மாதத்தில் ஆந்திரத்தில் இருந்து சென்னைக்கு வரும் குடிநீர் நிறுத்தப்பட்டது.

விநியோகம் குறைந்தது: சென்னைக் குடிநீர் வாரியத்தால் நாளொன்றுக்கு 83 கோடி லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. குடிநீர் பற்றாக்குறை காரணமாக தற்போது அதன் அளவு 55 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

குடிநீர் விநியோகம் செய்யப்படும் அளவு குறைந்துள்ளதால் அதனை ஈடு செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெய்வேலியிலிருந்து நாளொன்றுக்கு 2.5 கோடி லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது. பூண்டி, தாமரைப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 2.9 கோடி லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது.

சென்னை மாநகர பகுதிகளில் 626 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 676 இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக 6,000 மற்றும் 9,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 308 லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது 391 லாரிகள் மூலம் நாளொன்றுக்கு 3,700 நடைகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஜூலை மாதம் 5-ஆம் தேதிக்குப் பிறகு கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு கிடைக்ககூடும். ஆகஸ்ட் மாதத்தில் வீராணம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்கள் குடிநீரின் அவசியம் கருதி அதனை சிக்கனமாக பயன்படுத்துமாறும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.06.2013**

## நிலக்கடலை விதைப்பண்ணைஅமைக்க அறிவுரை : விவசாயிகளுக்கு வேளாண் துறை அழைப்பு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், "நிலக்கடலை விதைப்பண்ணை அமைத்து விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்' என, வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.
வேளாண் துறை விதை சான்று உதவி இயக்குனர் கிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில், பரவலாக மழை பெய்து வருகிறது. மழையை பயன்படுத்தி மானாவாரியாக ஆனி, ஆடி பட்டத்தில் நிலக்கடலை பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மத்திய, மாநில அரசுகள் எண்ணெய் வித்து பயிர்கள் உற்பத்தியை அதிகப்படுத்த பல வகை நலத்திட்டங்களை வேளாண் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது. நிலக்கடலையில், டி.எம்.வி.,7, ஜே.எல்.24 மற்றும் வீ.ஆர்.ஐ.,2 ஆகிய உயர் விளைச்சல் ரகங்களை இப்பட்டத்தில் சாகுபடி செய்யலாம். ஒரு ஏக்கருக்கு, 80 கிலோ விதை தேவைப்படும்.விதைகளை 30 செ.மீ.,க்கு 10 செ.மீ., இடைவெளியில் விதைத்து ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். ஒரே மாதிரியான பொறுக்கு விதைகளை பயன்படுத்தி, சரியான இடைவெளியில் விதைத்தால், பயிர் எண்ணிக்கை சீராக இருக்கும். இதனால், நல்ல மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவையான அளவு நிலக்கடலை விதைகள் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவைப்படும் நிலக்கடலை ரகங்களை வேளாண் துறை அலுவலர்கள் மூலம் மானிய விலையில் பெற்று விதைப்பண்ணை அமைக்கலாம்.நிலக்கடலையில் அதிக மசூல் பெற ஏக்கருக்கு 5.0 மெட்ரிக் டன் மக்கிய தொழுவுரமும், 4:4:18 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து தரவல்ல, 10 கிலோ யூரியா, 25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மூயுரேட் ஆஃப் பொட்டாஷ் உரங்களும் மண்ணில் போதிய ஈரம் இருக்கும் போது அடியுரமாக இட வேண்டும்.விதைகள் மூலம் பரவும் பூஞ்சான நோய்களை தடுக்கும் பொருட்டு விதைப்பதற்கு, 24 மணி நேரத்துக்கு முன் ஒரு கிலோ விதையுடன் நான்கு கிராம்

டிரைகோ டெர்மவிரிடி அல்லது 10 கிராம் சுடோமோனாஸ் புளோரசன்ஸ் அல்லது நான்கு கிராமம் திரம் அல்லது இரண்டு கிராம் கார்பன்டைசிம் கொண்டு பூஞ்சான விதை நேர்த்தி செய்ய வேண்டும்.காற்றில் உள்ள தழைச்சத்து கிரகித்து பயிருக்கு கொடுக்கும் பொருட்டு விதைக்கும் முன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையை ரைசோயியம் (நிலக்கடலை) இரண்டு பாக்கெட் மற்றும் பாஸ்போபேக்டரியா இரண்டு பாக்கெட் ஆகியவற்றை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து கலவையுடன் உயர் உர விதை நேர்த்தி செய்து, நிழலில் நன்கு உலர வைத்து பின் விதைக்க வேண்டும்.நிலக்கடலையில் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையை போக்கிட வேளாண் துறையினரால் பரிந்துரைக்கப்படும் நிலக்கடலை நுண்ணூட்டச்சத்து, ஐந்து கிலோவை, 20 கிலோ மண்ணுடன் கலந்து விØத்தவுடன் மண் பரப்பில் தூவ வேண்டும்.
விதைத்த 40 முதல், 45 நாளில் ஏக்கருக்கு, 80 கிலோ ஜிப்சத்தை மண்ணை கொத்தி இட்டு மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தில் உள்ள கால்சியம் மற்றும் கந்தக சத்து அதிக எண்ணெய் சத்து கொண்ட திரட்சியான காய்கள் அதிக அளவில் உருவாக்க உதவுகிறது. மானாவாரி நிலக்கடலை பயிரில் சுருள் பூச்சி, சிவப்பு கம்பளி புழு மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்க வாய்ப்பு உள்ளதால், தேவயான பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். நிலக்கடலை சாகுபடியை விதைப்பண்ணையாக அமைத்து தரமாமன விதை உற்பத்தி செய்வதன் மூலம் அதிக வருவாய் பெறலாம்.
விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உள்ளூர் சந்தை விலையுடன் பிரிமியம் மற்றும் உற்பத்தி மானியம் ஆகியவை கூடுதலாக கிடைப்பதால், அதிக லாபம் கிடைக்கும். தர்மபுரி மாவட்தத்டல், 222 ஹெக்டேரில் விதைப்பண்ணை அமைத்து, 189 மெட்ரிக்டன் விதைகள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பழமை வாய்ந்த பனை மரத்தில் பூ மற்றும் காய் பிடிப்பால் வியப்பு

திருச்செங்கோடு: திருச்செங்கோடு அருகே, 120 ஆண்டுகள் பழமை வாய்ந்த, 100 அடி உயரமுள்ள பனை மரத்தில், பூ பூத்து, காய் பிடிப்பு ஏற்பட்டுள்ளதை, சுற்றுவட்டார கிராம மக்கள் வியப்புடன் பார்த்துச் செல்கின்றனர்.
திருச்செங்கோடு அருகே மலைப்பாளையம், நத்தக்காட்டை சேர்ந்தவர் விவசாயி ராமசாமி. அவரது விவசாய தோட்டத்தில், 120 வயதுள்ள பனை மரம் உள்ளது. அந்த மரத்தில், சில தினங்களுக்கு முன், புதிதாக பூ மலர்ந்தது. தவிர, புதிய கிளை மற்றும் காய் பிடிப்பும் ஏற்பட்டது.தகவல் அறிந்த சுற்றுவட்டார கிராம மக்கள், பனை மரத்தை,

அதிசயத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.கிராம மக்கள் கூறியதாவது:
ராமசாமியின் தாத்தா சின்னாகவுண்டர், 120 ஆண்டுகளுக்கு முன் தனது தோட்டத்தில், இரு பனைமரங்களை வைத்துள்ளார். அதில் ஒன்று, சில ஆண்டுக்கு முன் பட்டுப்போனது. மற்றொரு மரம், 120 ஆண்டுகள் வயதுடையதாகும். இந்த பனை மரத்தின் அடிப்பகுதி, மூன்று பேர் சேர்ந்து கட்டிப் பிடிக்கும் அளவுக்கு பருத்துள்ளது. பெரிய பனை ஓலைகள் காணப்படுகிறது. காய்பிடிப்பு ஏற்படாத, இந்த மரத்தின் உச்சியில், மூன்று மாதங்களுக்கு முன் பச்சை நிறத்தில் கூம்பு வடிவ மொட்டு முளைத்தது. வறட்சியால் காய்ந்து போன மரம், மீண்டும் முளைப்பதாக நினைத்தபோது, கிளை விட்டு பூ பூத்து, அற்புதமாக காட்சியளித்தது. இந்த பூக்களில், தற்போது காய் பிடிப்பு ஏற்பட்டுள்ளது.
காற்றில் உதிர்ந்த காய்கள் இலந்தை போலவும் சுண்டைக்காய் போலவும் உள்ளது. பனம் பூ, நுங்கு, பனங்காய் , பனம் பழம் என வளர வேண்டிய மரத்தில், வேறு வகையாக பூப்பதும், காய்ப்பதும் அதிசயமாக உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

### பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கூட்டம்

சின்னசேலம்:விழுப்புரம், கடலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய நிர்வாகக்குழு மற்றும் சங்கத் தலைவர்கள் அறிமுக கலந்தாய்வு கூட்டம் சின்னசேலத்தில் நடந்தது.சின்னசேலம் ஒன்றிய சேர்மன் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். ஆவின் பொது மேலாளர் சுந்தரேசன், துணைத்தலைவர் செல்வராஜ் முன்னிலை வகித்தனர். சக்திவேல் வரவேற்றார்.ஆவின் தலைவர் விஜயகுமார் பால் வளத்தை பெருக்கும் முறைகள் குறித்து பேசி, பால் உற்பத்தியாளர்களின் குறைகளை கேட்டறிந்தார். பால்வளத்துறை துணைப்பதிவாளர்கள் ராஜா, பாலசுந்தரம், கனியாமூர், எலவடி, மூங்கில்பாடி, வடபாதி, வேப்பூர், சங்கராபுரம் பால் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர், செயலாளர்கள், டாக்டர்கள் சண்முகம், விருத்தப்பதாஸ் பேசினர்.
சங்கராபுரம் சங்க மேலாளர் முருகேசன் நன்றி கூறினா

### தென்மேற்கு பருவமழைக்காக காத்திருக்கும் தடுப்பணைகள்

ஊத்துக்கோட்டை:கோடை மழை பொய்த்த நிலையில், ஆரணி ஆற்றில் கட்டப்பட்ட தடுப்பணைகள் அடுத்து வரவுள்ள, தென்மேற்கு பருவ மழையை நம்பி உள்ளதால், தற்போது, தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது.
ஆந்திர மாநிலம், நகரியில் தோன்றி தமிழகத்தை நோக்கி வரும் ஆரணி ஆற்றில் தமிழக பகுதிகளில், ஊத்துக்கோட்டை அடுத்த, சிட்ரபாக்கம், பனப்பாக்கம், பாலேஸ்வரம்,

எ.ரெட்டிப்பாளையம் ஆகிய இடங்களில், தடுப்பணைகள் உள்ளன.

இதில், பனப்பாக்கம், பாலேஸ்வரம் ஆகிய இரு தடுப்பணைகளும், இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. சிட்ரபாக்கம் தடுப்பணையில் ஒரு டி,எம்.சி., தண்ணீர் தேக்கி வைக்க முடியும். அடுத்து, பனப்பாக்கம் தடுப்பணையில் ஒரு டி.எம்.சி., நீரும், பாலேஸ்வரம் அணைக்கட்டில் இரண்டு டி.எம்.சி., நீரும், எ.ரெட்டிப்பாளையம் அணைக்கட்டில், 800 மில்லியன் கன அடியும் தேக்கி வைக்க முடியும்.

தற்போது, கோடை பருவமழை பெய்யாததால், மேற்கண்ட தடுப்பணைகள் தண்ணீரின்றி வறண்டு கிடக்கின்றன. இதேபோல், கொற்றலை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு பூண்டி நீர்த்தேக்கம், தாமரைப்பாக்கம் அணைக்கட்டு ஆகியவையும், தண்ணீரின்றி வறண்டு காணப்படுகின்றன.கோடை மழை பெய்திருந்தால், அணைக்கட்டில் தண்ணீர் நிரம்புவதுடன், ஒவ்வொரு தடுப்பணைகளைச் சுற்றியும்,10 கி.மீ., சுற்றளவிற்கு நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திருக்கும்.போதுமான அளவு மழை பெய்யாததால், மேற்கண்ட அனைத்து தடுப்பணைகளும், தண்ணீரின்றி வறண்டு காணப்படுகின்றன.

இதுகுறித்து, பொதுப்பணி துறை உயரதிகாரி ஒருவர் கூறும்போது, "ஒவ்வொரு ஆண்டும், தென்மேற்கு பருவ மழையால் தான், நமக்கு அதிகளவில் மழை நீர் கிடைக்கும். பல்வேறு இடங்களில், பருவமழை துவங்கிய நிலையில், விரைவில் திருவள்ளூர் மாவட்டத்தில் மழை பெய்யும். அப்போது பெய்யும் மழையால், தடுப்பணைகளில் மழைநீர் நிரம்புவதுடன், சுற்றியுள்ள ஏரி, குளங்கள் நிறைந்து நிலத்தடி நீர்மட்டம் உயரும்' என்றார்.

## நுண்ணீர் பாசனத்தை அதிக பரப்பளவில் அமைக்க ஆட்சியர் வலியுறுத்தல்

திருவள்ளூர்:""நுண்ணீர்ப் பாசனத்தை, அதிக பரப்பளவில் அமைக்க, விவசாயிகள் முன்வர வேண்டும்,'' என, ஆட்சியர் வலியுறுத்தினார்.தோட்டக்கலை துறையின் சார்பாக, தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்க கருத்தரங்கு, ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. ஆட்சியரின் நேர்முக  உதவியாளர் (வேளாண்மை) சுப்ரமணியன் வரவேற்றார்.ஆட்சியர் வீர ராகவ ராவ், தலைமை ஏற்று, கருத்தரங்கை துவக்கி வைத்து பேசுகையில், ""சிறு மற்றும் குறு விவசாயிகள், 100 சதவீத சொட்டுநீர்ப் பாசன மானிய திட்டத்திலும், இதர விவசாயிகள், 75 சதவீத மானியத் திட்டத்திலும் நுண்ணீர்ப் பாசனம் அதிக பரப்பளவில் அமைக்க முன்வர வேண்டும்,'' என்றார்.மேலும், ""பாரம்பரிய சாகுபடி முறைகளை மாற்றம் செய்து, புதிய தொழில்நுட்பத்துடன் பயிரிட்டு, அதிக மகசூல் பெற வேண்டும். தோட்டக்கலை பயிர்களை, அதிகளவில் சாகுபடி செய்து, விவசாயிகள் வருவாயை பெருக்கிக் கொள்ள வேண்டும்,'' என்றார்.தோட்டக்கலை துணை இயக்குனர் நவநீத

கண்ணன் திட்ட உரையாற்றினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் (தோட்டக்கலை) சதாசக்தி, நுண்ணீர்ப் பாசன விளக்க உரையாற்றினார். தோட்டக்கலை உதவி இயக்குனர் அரவிந்தன் ஒளிப்பதிவு மூலம், நுண்ணீர்ப் பாசன நுட்பங்கள் குறித்து விளக்கி கூறினார்.தோட்டக்கலைத் துறை மற்றும் நுண்ணீர் பாசன நிறுவனங்கள் சார்பாக, கருத்துக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

### இன்னும் சில நாட்கள் மட்டுமே... நடையை கட்டுகிறது மாம்பழ சீசன்

ஆர்.கே.பேட்டை:மூன்று மாதங்களாக வீறுநடை போட்ட மாம்பழ வியாபாரம், இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இன்னும் சில நாட்களில், சீசன் முடிவுக்கு வருகிறது. மாவட்டத்தில் திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு ஒன்றியங்களில், மாந்தோப்புகள் அதிகளவில் உள்ளன. கடந்த பிப்ரவரி, மார்ச் மாதம் வீசிய புயல் காற்றில், மாந்தோப்புகள் அதிகளவில் பாதிக்கப்பட்டன. பூக்கள் மற்றும் பிஞ்சுகள் உதிர்ந்து விட்டன. இப்பகுதியில் உள்ள விவசாயிகள், கடும் நஷ்டத்தை எதிர் கொண்டனர்.உள்ளூர் வரத்து குறைவு விளைச்சல் பாதிப்பால், இந்த ஆண்டு மாம்பழ விலை உச்சத்தில் இருக்கும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அண்டை மாநிலங்களின் வரத்து காரணமாக, கடந்த ஆண்டை விட குறைந்த விலைக்கு மாம்பழங்கள் விற்பனை செய்ப்பட்டன. உள்ளூர் வரத்து குறைந்தாலும், கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலம் பலமனேர், சித்தூர், புத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் மாம்பழ விளைச்சல் அமோகமாக இருந்தது.தமிழகத்திற்கு இப்பகுதியில் இருந்து, மாம்பழங்கள் கொள்முதல் செய்யப்பட்டன. இதன் காரணமாக கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு மிக குறைந்த விலைக்கு, மாம்பழங்கள் விற்பனை செய்யப்பட்டன. கடந்த ஆண்டு, பங்கனபள்ளி, மல்கோவா, பேனிஷா உள்ளிட்ட ரகங்கள், 60 முதல், 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டன.கிலோ ரூ.10 இந்த ஆண்டு பங்கனபள்ளி, பேனிஷா, 20 முதல், 40 வரையும், மல்கோவா, 40, நீலம், 30, வெட்டு ரகம் கிலோ ஏழு ரூபாய் முதல், 10 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த விலைக்கு உயர் ரக பழங்கள் கிடைத்ததால், கடந்த மூன்று மாதங்களாக மாம்பழ விற்பனை பரபரப்பாக நடந்தது.இதுகுறித்து, கே.ஜி.கண்டிகையைச் சேர்ந்த வியாபாரிகள் சிலர் கூறுகையில், "தற்போது சீசன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இன்னும், சில நாட்களுக்கு மட்டுமே, மாம்பழங்கள் கிடைக்கும். சீசன் முடியும் நேரம் என்பதால், விலை சற்று உயர்ந்துள்ளது. மீண்டும் மாம் பழங்களை ருசிக்க, இன்னும் ஒன்பது மாதங்கள் காத்திருக்க வேண்டும்' என்றனர்.

## மண் வளத்தை அறிந்து பயிரை தேர்வு செய்யும் திட்டம்...அறிமுகம்! விளைச்சலை மேம்படுத்த வேளாண் துறை ஏற்பாடு

காஞ்சிபுரம்:மண் வளத்தை அறிந்து, அதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்ய வசதியாக, மண் பரிசோதனை செய்யும் "பார்மர் கிராப்' திட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப் பட்டு உள்ளது. முதற்கட்டமாக, ஒவ்வொரு ஒன்றியத்திலும், 6 ஊராட்சிகள் தேர்வு செய்யப்படு, அங்கு இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
குறைந்ததுகாஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த சில ஆண்டுகள் வரை, 1.60 லட்சம் ஹெக்டேரில் நெல் பயிர் செய்யப்பட்டு வந்தது. தண்ணீர் பற்றாக்குறை, மண் வளம் குறைவு, புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்தாமை உள்ளிட்ட பல காரணங்களால், நெல் பயிர் செய்யும் பரப்பு, 19 ஆயிரம் ஹெக்டேராக குறைந்துவிட்டது.
இதையடுத்து, மாற்று பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்வதில், அதிகமான விவசாயிகள் இறங்கி உள்ளனர். சாகுபடி அதிகரிக்க மண் வளம் மிக முக்கியமானதாகும். எனவே, மண் பரிசோதனை மிக அவசியமானதாகும்.அவசியம்மண்ணில், தழை சத்து, உப்பின் நிலை, கார அமில நிலை, மணி சத்து, சாம்பல் சத்து, நுண்ணூட்ட சத்து ஆகியவை எத்தனை சதவீதம் உள்ளது என்பதை அறிந்து கொண்டால் மட்டுமே, அதற்கேற்ற பயிர் வகைகளை பயிரிட முடியும். காஞ்சிபுரத்தில், மண் பரிசோதனை மையம் இயங்கி வருகிறது. இங்கு, ஒரு விவசாயி 25 ரூபாய் கட்டணம் செலுத்தினால், அவர் நிலத்தின் மண் வளத்தை அறிந்து கொள்ள முடியும். ஆனால், பல விவசாயிகள் மண்பரிசோதனை செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. மற்ற விவசாயிகளை பார்த்து, தங்களது நிலத்திற்கு ஒவ்வாத பயிர்களை பயிர் செய்து, நஷ்டம் அடைகின்றனர். இதனால், விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இந்நிலையில், ஒவ்வொரு ஊராட்சிக்கும் நேரில் சென்று, விவசாயிகளை சந்தித்து, அவர்கள் நிலத்தின் மண் வளத்தை இலவசமாக பரிசோதனை செய்து, அதில் பயிரிட வேண்டிய சரியான பயிரை தேர்வு செய்து தெரிவிக்கும் திட்டம் ஒன்றை, வேளாண் துறை அறிமுகப்படுத்தி உள்ளது.
சிபாரிசு இதுகுறித்து, காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மை துறை இணை இயக்குனர் சவுந்தரராஜன் கூறுகையில், ""இத்திட்டத்திற்கு "பார்மர் கிராப்' என, பெயரிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில், அதிகமாக விவசாயம் நடக்கும் ஊராட்சிகள் இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்படும்,'' என்றார்.
மேலும் அவர் கூறுகையில், ""விளை நிலங்களில் இருந்து, மண்ணை எடுத்து வந்து,

காஞ்சிபுரத்தில் உள்ள மண் பரிசோதனை மையத்தில், சோதனை செய்யப்படும். மண்ணின் தழைசத்து, உப்பின் நிலை, கார அமில நிலை, மணி சத்து, சாம்பல் சத்து, நுண்ணூட்ட சத்து ஆகியவை குறித்து அறிந்து, அதற்கேற்ற பயிர் வகைகள், ரசாயன உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவை குறித்து, விவசாயிகளுக்கு சிபாரிசு செய்யப்படும்," என்று கூறினார். தபால் மூலம்... மண்வள சோதனைக்கு பின், அந்த முடிவுகள் தபால் மூலமாகவும், இணைய தளம் மூலமாகவும் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். முதல் கட்டமாக, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 6 கிராமங்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு, அங்கு திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில், முதல் கட்டமாக, 78 கிராமங்கள் மண் வள பரிசோதனை செய்ய தேர்வு செய்யப்பட்டு உள்ளன. இது குறித்து, மேலும் விவரங்களை தெரிந்துகொள்ள, காஞ்சிபுரம், மண் ஆய்வுக்கூடம், வேளாண்மை மூத்த அலுவலர் காளிகாம்பாளை, 97909 11069 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மண்ணின் தழைசத்து, உப்பின் நிலை, காரஅமில நிலை, மணிசத்து, சாம்பல் சத்து, நுண்ணூட்ட சத்து ஆகியவை குறித்து அறிந்து, அதற்கேற்ற பயிர் வகைகள், ரசாயன உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவை குறித்து, விவசாயிகளுக்கு சிபாரிசு செய்யப்படும்

### மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

கரூர்: கரூரில் நேற்று நடந்த, தமிழக முதல்வரின் கனவு திட்டமான மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கில் பெரும்பாலான உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பங்கேற்காமல் "டிமிக்கி' கொடுத்தனர். கருத்தரங்கில் பங்கேற்ற சிலர், சிறிது நேரத்தில் வெளியேறியதால், கூட்ட அரங்கம் வெறிச்சோடி காணப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 2001-06ம் ஆண்டு நடந்த அ.தி.மு.க., ஆட்சியின் போது, மழைநீர் சேகரிப்பு திட்டத்தை, முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதையடுத்து, மாநிலம் முழுவதும் வீடுகள், வணிக கட்டிடங்கள், அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு முறை கட்டாயப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் மழைக்காலத்தில் அதிகளவில் தண்ணீரை, நிலத்தடியில் சேமிக்க வழிவகை செய்யப்பட்டது. தொடர்ந்து, கடந்த 2006-11ம் ஆண்டு நடந்த தி.மு.க., ஆட்சியின் போது, மழைநீர் சேகரிப்பு திட்டம் பெரியளவில் கண்டுகொள்ளப்படவில்லை.

கடந்தாண்டு தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை, தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், நிலத்தடி நீரின் அளவு அதிகளவில் குறைந்து

விட்டது. தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளில் அமைக்கப்பட்ட ஃபோர்வெல் குழாய்களில் கூட தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டது. இதனால், போர்வெல் குழாய் மூலம் சின்டெக்ஸ் தொட்டிகளில் லாரிகள் மூலம் தண்ணீர் சப்ளை செய்யும் அவலநிலை ஏற்பட்டது. இதனால், நிலத்தடி நீரை அதிகரிக்கும் பொருட்டு மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்தது. அதன் அடிப்படையில், தமிழகம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு திட்டம் குறித்து கருத்தரங்குகள் நடத்த, குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இதையடுத்து, கரூர் ஆர்த்தி ஹோட்டலில் நேற்று மழைநீர் சேகரிப்பு குறித்த கருத்தரங்கம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக, கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த பஞ்., தலைவர்கள், பஞ்., யூனியன் தலைவர்கள், டவுன் பஞ்., தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கு தகவல் அனுப்பபட்டது. நேற்று காலை 10 மணிக்கு மழைநீர் சேகரிப்பு தொடர்பான கருத்தரங்கை, கலெக்டர் ஜெயந்தி துவக்கி வைப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், கரூர் மாவட்டத்தை சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் பெரும்பாலோனர் குறிப்பிட்ட நேரத்தில் வராததால், கருத்தரங்கு நேற்று காலை 11 மணிக்கு தாமதமாக துவங்கியது. இதில், கலெக்டர் ஜெயந்தி பங்கேற்று கருத்தரங்கை துவக்கி வைத்து பேசிவிட்டு, வேறு நிகழ்ச்சிக்கு புறப்பட்டுச் சென்றார்.

பிறகு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிர்வாகி பொறியாளர் சிவசங்கர், மழைநீர் சேகரிப்பு குறித்து பேச துவங்கினார். அப்போது, மழைநீர் சேகரிப்பு கருத்தரங்கில் பங்கேற்ற சில உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கருத்தரங்கில் முழுமையாக பங்கேற்காமல் ஒவ்வொருவராக பாதியில் கிளம்பிச் சென்றனர். இதனால், கருத்தரங்கு நடந்த கூட்ட அரங்கம் சில நிமிடங்களில் வெறிச்சோடி காணப்பட்டது.

புறக்கணித்த அ.தி.மு.க.,வினர் கரூர் மாவட்டத்தில் 157 கிராம பஞ்.,கள், 11 டவுன் பஞ்.,கள் மற்றும் எட்டு பஞ்., யூனியன்கள் உள்ளது. இதில், அ.தி.மு.க.,வைச் சேர்ந்தவர்கள் தான் 90 சதவீதம் பேர் பொறுப்பில் உள்ளனர். தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கனவு திட்டமான, மழை நீர் சேகரிப்பு திட்ட கருத்தரங்கை அ.தி.மு.க.,வைச் சேர்ந்த பெரும்பாலான உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள்தான் புறக்கணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### விவசாயிக்கு பயிர்க்கடன் தொகை உச்சவரம்பு நிர்ணயம்: கலெக்டர்

தஞ்சாவூர்: "தஞ்சை மாவட்டத்துக்கு பல்வேறு பயிர்க்கடன்களுக்கான கடன் தொகை உச்சவரம்பை தொழில்நுட்ப குழு அங்கீகரித்துள்ளது. அதன்படி, நிர்ணயிக்கப்பட்டுள்ள பயிர்க்கடன் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது' என, கலெக்டர் கூறியுள்ளார். தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தஞ்சை மாவட்டத்துக்கு 2013-14ம் ஆண்டுக்கு பல்வேறு வகையான பயிர்க்கடன்களுக்கான கடன் தொகை உச்சவரம்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதில், தஞ்சை மாவட்டத்துக்கு பயிர்க்கடன் பயிர் வாரியாக ஏக்கருக்கு வழங்கப்படவுள்ள கடன் தொகை உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில், நெல் உயர் விளைச்சலுக்கு ஏக்கருக்கு 17 ஆயிரத்து 500 ரூபாயும், நேரடி நெல் விதைப்புக்கு 9,500 ரூபாயும், அறிஞர் அண்ணா குருங்குளம் சர்க்கரை ஆலை, திருஆரூரான் சர்க்கரை ஆலை, ஈ.ஐ.டி., பாரி, அம்பிகா சர்க்கரை ஆலைகள் மூலம் பதிவு பெற்ற கரும்பு பயிருக்கு 38 ஆயிரம் ரூபாயும், தென்னை பராமரிப்புக்கு 14 ஆயிரத்து 500 ரூபாயும், வாழை பயிருக்கு 34 ஆயிரத்து 500 ரூபாயும் மற்றும் இதர பயிர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கடன் உச்சவரம்புக்கு உட்பட்டு தஞ்சை, கும்கோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளால் பருவகாலம் முழுவதும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களு க்கு வழங்கப்பட்டு வருகிறது.

### விவசாயிகளும் விளையாடலாம் ரூ.50லட்சம் நிதி ஒதுக்கீடு

நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் விளையாட்டு திறனை ஊக்குவிக்கும் வகையில், தேயிலை வாரியம், முதன் முறையாக ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. கிராமபுற சிறு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை ஒருங்கிணைக்கும் வகையில், "நீலகிரி சீனியர் சிடிசன் டிரஸ்ட்' சார்பில், ஆண்டுதோறும் "தேயிலை வாரிய சுழற்கோப்பை' க்கான, கால்பந்து போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இப்போட்டிகள் கடந்த சில ஆண்டுகளாக, பெட்டட்டி சுங்கம் மைதானத்தில் நடந்துவந்த நிலையில், நடப்பாண்டு, கோத்தகிரி நகரப் பகுதியில் நடத்தப்பட்டது.

இப்போட்டி, மாவட்டம் முழுவதும் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் கால்பந்து ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பபை பெற்றது. பரிசளிப்பு விழாவில், "சிறு விவசா யிகளின் விளையாட்டுக்காக, தேயிலை வாரியம், நிதி ஒதுக்கவேண்டும்' என, கோரிக்கை விடுத்தனர்.  இதன்படி, தேயிலை வாரியத்தின் துணைத் தலைவர் கோஷிபேபி மற்றும் உறுப்பினர் டாக்டர் ராமு ஆகியோரின் வலியுறுத்தலின் பேரில், தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணனின் முயற்சியால், "நீலகிரி உட்பட, தென் னிந்தியா சிறு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், 50 லட்சம் ரூபாய் நிதி விளையாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது' என தேயிலை வாரியம் அறிவித்துள்ளது.

## மஞ்சள், வாழைக்கு ஊடுபயிராக சேனை கிழங்கு டன் ரூ.15 ஆயிரத்தை தொட்டதால் ஆர்வம்

கோபிசெட்டிபாளையம்: சேனை கிழங்கு விலை, டன், 15 ஆயிரம் ரூபாயாக உயர்ந்ததை தொடர்ந்து, கோபி சுற்று வட்டாரத்தில் வாழை, மஞ்சள் ஆகிய பயிர்களில் ஊடுபயிராகவும், தனியாகவும் சேனை பயிரிடுவது அதிகரிக்க துவங்கி உள்ளது. கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம், அளுக்குளி உள்ளிட்ட பகுதிகளில் போர்வெல், கிணற்று பாசனத்தில் வாழை, மஞ்சள் போன்றவை பயிரிடப்பட்டுள்ளன. வாழை, மஞ்சளில் ஊடு பயிராகவும், தனிப்பயிராகவும் சே னை கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. 90 முதல், 110 நாட்கள் பயிராக சேனை கிழங்கு விலை, டன், 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுவதால், சேனை பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சேனை கிழங்கு விலை உயர்ந்துள்ளதை, தொடர்ந்து சில இடங்களில் சேனை கிழங்கு பயிரிட துவங்கி உள்ளனர். விவசாயிகள் கூறியதாவது:
கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததை தொடர்ந்து, போர்வெல் மற்றும் கிணற்று பாசனத்தை நம்பியே விவசாயிகள் உள்ளோம். விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது. பெண்களுக்கு, 150 முதல், 200 ரூபாய் வரை கூலி கொடுத்தால் கூட, வேலைக்கு வர தயங்குகின்றனர். பல ஆண்டுகளாக விவசாய கூலி செய்யும் நபர்கள் மட்டுமே, பணி செய்து வருகின்றனர். இளைய தலைமுறையினர் விவசாய பணிக்கு வரவில்லை. வாழை மற்றும் மஞ்சளில் ஊடுபயிராக சேனை கிழங்கு செய்துள்ளோம். ஒரு டன் சேனை கிழங்கு, 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, ஒரு டன் விதை பயன்படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு, 10 டன் வரை கிடைக்கும். வாழையில் ஊடுபயிராக பயிரிட்டுள்ளதால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். நஷ்ட ஏற்பட வாய்ப்பில்லை, என்றனர்.

## வேளாண் பல்கலை மாணவிகளுக்கு பயிற்சி

கோபிசெட்டிபாளையம்: காசிபாளையத்தில் உள்ள வாழை குளிர் கிடங்கில், வேளாண்மை பல்கலைக்கழத்தை சேர்ந்த மாணவியர் தொழில் நுட்ப பயிற்சி பெற்றனர். வேளாண் பல்கலைக்கழகத்தை சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவியர் அமுதவள்ளி, பிரித்திவா, ராஜராஜேஸ்வரி, ரேவதி, சரண்யா, சாஹிராசெரின், சண்முகபிரியா ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத்துக்காக, டி.என்.பாளையம் வேளாண் துறைக்கு வந்துள்ளனர். வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி வழிக்காட்டுதலில், வேளாண் அலுவலர் முரளி, சரோஜா ஆகியோரின் கீழ், மாணவியர் அனைவரும் பயிற்சி பெறுகின்றனர். மண், விதை, பூச்சிக்கொல்லி பரிசோதனை நிலையங்கள், உயிர் உர ஆய்வு கூடம் போன்றவற்றுக்கு சென்று பயிற்சி பெற்றனர். விவசாயிகளின் தோட்டங்களுக்கு சென்று, வேளாண் பணிகள் குறித்து கண்டறிந்தனர். விவசாயிகளிடம், வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்து கேட்டறிந்தனர். காசிபாளையம் "ஈடன் பார்ம் பிரஷ்' வாழை குளிர் பதன கிடங்குக்கு சென்று, பயிற்சி பெற்றனர். வாழையின் வளர்ப்பு முறைகள், திசு வாழைக்கன்றுகள் சாகுபடி, வாழை அறுவடை, கொள்முதல், பதப்படுத்தல், வினியோகம் மற்றும் ஏற்றுமதி குறித்த தகவல்கள் மற்றும் செய்முறைகள் குறித்த விளக்கங்களை கேட்டறிந்தனர்.

## முதல் போக நெல் சாகுபடிக்கு பெரியாறு அணை இன்று திறப்பு

கூடலூர்:தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் சாகுபடிக்காக, பெரியாறு அணையில் இருந்து, இன்று தண்ணீர் திறக்கப்படுகிறது.
பெரியாறு அணை நீரை நம்பி, கம்பம் பள்ளத்தாக்கில் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக நெல் விவசாயம் உள்ளது. முதல் போக நெல் சாகுபடிக்காக, இன்று காலை 9.30 மணிக்கு, தேனி கலெக்டர் பழனிசாமி, தேக்கடியில் உள்ள ஷட்டர் மதகை இயக்கி, திறந்து வைக்கிறார். அதற்கு முன், தேக்கடி ஷட்டர் பகுதியில் சிறப்பு பூஜை, முஸ்லிம் விவசாயிகளின் தொழுகை நடைபெறும். பொதுப்பணித்துறையினர், விவசாயிகள் கலந்து கொள்கின்றனர். நீர்மட்டம்: பெரியாறு அணையில் நேற்று காலை நிலவரப்படி நீர்மட்டம் 124.30 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து 4335 கன அடியாகவும், நீர் திறப்பு 1372 கன அடியாகவும் இருந்தது. நீர் இருப்பு 3479 மில்லியன் கன அடி. பெரியாறில் 24.6 மி.மீ., தேக்கடியில் 18 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.
நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது. கடந்த ஆண்டு முதல் போக நெல் சாகுபடிக்கு, ஜூன் 25ல்

திறக்கப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 112 அடி மட்டுமே இருந்தது. ஆனால், இந்த ஆண்டு 124 அடியைக் கடந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### தஞ்சை வயல்தின விழாவில் வேளாண்அதிகாரி யோசனை

தஞ்சாவூர்: தஞ்சையில் வயல்வெளி தினவிழாவில், குறுவை சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு வேளாண்மை இணை இயக்குனர் ராமதாஸ் ஆலோசனை வழங்கினார். தஞ்சை அடுத்த அய்யாசாமிப்பட்டி கிராமத்தில் ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப்பள்ளி தினவிழா நடந்தது. இதில், அய்யாசாமிப்பட்டி, மருதக்குடி, மாதுரான்புதுக்கோட்டை உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். இதில், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சொக்கலிங்கம், பஞ்., தலைவர் செங்குட்டுவன் ஆகியோர் பேசினர். வேளாண் அலுவலர்கள் சுஜாதா, மணிமேகலை, மணிமாறன், சரண்யா, வேளாண் உதவி அலுவலர்கள் மணவாளன், பழனி, அனுசுயாதேவி உள்பட பலர் பங்கேற்றனர். தஞ்சை மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் ராமதாஸ் பேசியதாவது: தஞ்சை மாவட்டத்தில், வாய்ப்புள்ள இடங்களில் விவசாயிகள் குறுவை பட்டத்தில் நிலக்கடலை, மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற மாற்றுப்பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து, அதிக லாபம் ஈட்ட வேண்டும். புதிய ரகங்களை பயன்படுத்தியும், நுண்ணூட்ட உரங்களை தெளித்தும் அதிக மகசூல் பெற விவசாயிகள் உரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
இவ்வாறு அவர் பேசினார்.வேளாண் உதவி அலுவலர் சுரேஷ் நன்றி கூறினார்.

### விவசாயிக்கு பயிர்க்கடன் தொகை உச்சவரம்பு நிர்ணயம்: கலெக்டர்

தஞ்சாவூர்: "தஞ்சை மாவட்டத்துக்கு பல்வேறு பயிர்க்கடன்களுக்கான கடன் தொகை உச்சவரம்பை தொழில்நுட்ப குழு அங்கீகரித்துள்ளது. அதன்படி, நிர்ணயிக்கப்பட்டுள்ள பயிர்க்கடன் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது' என, கலெக்டர் கூறியுள்ளார். தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
தஞ்சை மாவட்டத்துக்கு 2013-14ம் ஆண்டுக்கு பல்வேறு வகையான பயிர்க்கடன்களுக்கான கடன் தொகை உச்சவரம்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதில், தஞ்சை மாவட்டத்துக்கு பயிர்க்கடன் பயிர் வாரியாக ஏக்கருக்கு வழங்கப்படவுள்ள கடன் தொகை உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
இதில், நெல் உயர் விளைச்சலுக்கு ஏக்கருக்கு 17 ஆயிரத்து 500 ரூபாயும், நேரடி நெல்

விதைப்புக்கு 9,500 ரூபாயும், அறிஞர் அண்ணா குருங்குளம் சர்க்கரை ஆலை, திருஆரூரான் சர்க்கரை ஆலை, ஈ.ஐ.டி., பாரி, அம்பிகா சர்க்கரை ஆலைகள் மூலம் பதிவு பெற்ற கரும்பு பயிருக்கு 38 ஆயிரம் ரூபாயும், தென்னை பராமரிப்புக்கு 14 ஆயிரத்து 500 ரூபாயும், வாழை பயிருக்கு 34 ஆயிரத்து 500 ரூபாயும் மற்றும் இதர பயிர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கடன் உச்சவரம்புக்கு உட்பட்டு தஞ்சை, கும்கோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளால் பருவகாலம் முழுவதும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களு க்கு வழங்கப்பட்டு வருகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.06.2013**

**பவானிசாகர் அணை நீர்மட்டம் ஒரேநாளில் 3 அடி உயர்வு**

ஈரோடு, : பவானிசாகர் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்தது.

பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்திலும், கேரளாவிலும் தொடர்ந்து தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. மேலும் கேரளாவின் மன்னார்காடு, அகளி, சாவடியூர், முள்ளி பகுதிகளிலும் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் பவானி ஆற்றில் வரும் நீர் பில்லூர் அணையை வந்தடைந்தது. இதன் காரணமாக பில்லூர் அணை நிரம்பியது.நேற்று முன்தினம் அணை நிரம்பியதால் பில்லூர் அணை திறக்கப்பட்டு உபரி நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால் படுபாதாளத்திற்கு சென்ற பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. நேற்றுமுன்தினம் இரவு பவானிசாகர் அணைக்கு 14,749 கனஅடி வீதம் இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணியளவில் 12,237 கனஅடியாக குறைந்தது. இருப்பினும், அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வந்தது.நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு அணையின் நீர்மட்டம் 52.30 அடியாக இருந்த நிலையில் நேற்று காலை 8 மணியளவில் 54.35 அடியாக உயர்ந்தது. அதாவது நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலைக்குள் 2 அடி நீர்மட்டம் உயர்ந்தது. காலை 8 மணிக்கு பிறகு நீர்வரத்து மேலும் அதிகரிக்க தொடங்கியது. நேற்று பகல் 1 மணிக்கு அணைக்கு 15861 கனஅடியாக நீர்வரத்து இருந்தது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் 55 அடியாக உயர்ந்தது. இரவு வரையிலும் நீர்வரத்து அதிகரித்ததால் அணையின் நீர்மட்டம் நேற்று ஒரேநாளில் 3 அடி உயர்ந்தது. அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவது ஈரோடு மாவட்ட விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், ஈரோடு மாவட்டம் முழுவதும் வறண்ட காலநிலையே நிலவுகிறது. இதனால் மானாவாரி சாகுபடி நடைபெறுவது சந்தேகமாக

உள்ளது.  இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில்: பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தென்மேற்கு பருவமழையால் நீர்வரத்து அதிகரித்து அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவது மகிழ்ச்சியை தருகிறது. வழக்கமாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியின் அடிவாரத்திலுள்ள சத்தியமங்கலம், பவானிசாகர், பங்களாபுதூர், தூக்கநாயக்கன்பாளையம், கள்ளிப்பட்டி, அத்தாணி, அந்தியூர் மற்றும் மலைப்பகுதிகளான தாள வாடி, ஆசனூர், பர்கூர் பகுதிகளில் தென்மேற்கு பருவமழை சீசனில் ஓரளவு சாரல் மழை யாவது அடிக்கும். இந்த ஆண்டு ஓரிரு நாட்கள் மட்டும் மழை பெய்து விட்டு சாரல் மழை என்பதே இல்லாத அளவிற்கு வறட்சியான காலநிலையே நிலவுகிறது.தென்மேற்கு பருவமழை மறைவு மாவட்டமாக கருதப்படும் ஈரோடு மாவட்டத்தில் இந்த சீசனில் ஓரளவுக்கு கூட பருவமழை பெய்யாததால் மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை, சோளம், ராகி, கம்பு, தினை, எள் போன்ற பயிர்களை சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**பண்ணையில் நேரடி கொள்முதல் அரசு பசுமை நுகர்வோர் கடைக்கு ஊட்டி காய்கறிகள் சப்ளை**

ஊட்டி, :   சென்னையில் உள்ள பசுமை நுகர்வோர் கடைகளுக்கு மாவட்டத்தில் விளையும் காய்கறிகள் பண்ணையில் இருந்து நேரடியாக கொள்முதல் செய்து அனுப் பி வைக்கப்படுகிறது.

காய்கறி விலை உயர்வி னை கட்டுப்படுத்தும் நோக்கில் தமிழக முதல்வர் விவசாயிகளையும், நுகர்வோர்களையும் நேரடியாக இணைக்க கூடிய 31 பண்¬ ண பசுமை நுகர்வோர் கடைகளை சென்னை நகரில் திறந்துள்ளது. இக்கடைகளுக்கு மாவட்டத்தில் பயிரிடப்படும் உருளைக் கிழங்கு, காரட், பீட்ரூட், முட்டை கோஸ், நூல்கோல் ஆகிய காய்கறிகள் விவசாயிகளின் தோட்டங்களில் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது. பின் சென்னைக்கு இரு நாட்களுக்கு ஒரு முறை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்படும் காய்கறிகளுக்கான தொ¬ கயினை உடனுக்குடன் விவசாயிகளின் பண்ணையிலேயே பட்டுவாடா செய்யப்படுகிறது.  மாவட்டத்தில் காய்கறிகள் அதிகமாக விளையக்கூடிய பகுதிகளான கொ துமுடி, குளிச்சோலை, எம்.பாலாடா, இத்தலாம், தொரையஹட்டி, இடுஹ ட்டி, கூக்கல்தொரை, கக்குச்சி, தும்மனட்டி, எமரால்டு, நெடுகுளா போ ன்ற இடங்களில்

இருந்து நேரடியாக கொள்முதல் செய்து சென்னைக்க அனுப்பி வைக்கப்படுகிறது. இப்பணிகள், மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் மேற்பார்வையில் நடந்து வருகிறது. இதுகுறித்த கலந்தாய்வு கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.
கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தலை மை வகித்தார். கூட்டுறவுத்துறை கூடுதல் பதிவாளர் பிரமிளா, மண்டல இ¬ ணப்பதிவாளர் வனிதா, நீலகிரி விற்பனைச் சங்க செயலர் கேசவன், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் மீராபாய் ஆகியோர் கலந்துக் கொண்டனர். கூட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுவது குறித்து விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், நூல்கோல் ஆகிய மைல காய்கறிகள் சென் னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்தினால் மாவட்ட விவசாயிகள் இடைத் தரகர்களின் தலையீடு இல்ல £மலும், போக்குவரத்து செலவீனம் ஏதுமில்லாமலும் தங்களது தோட்டங்களிலேயே காண் கறிகளை நல்ல விலைக்கு விற்க ஏற்ப £டு செய்வதுடன், சென்னை நகரில் உள்ள நுகர்வோர்களுக்கு நியாயமான வி¬ லயில் தரமான, பசுமையாக காய்கறிகளை பெறும் வசதிக¬ ள ஏற்படுத்தித்தர இத்திட்டம் வழிவகுத்துள்ளது என கலெக்டர் தெரிவித்தார்.

**விவசாயிகளின் குறைகளுக்கு 15நாளில் தீர்வு காண உத்தரவு**

பொள்ளாச்சி, : விவசாயிகளின் குறைகளை 15 நாட்களுக்குள் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு சப்&கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். பொள்ளாச்சி சப்&கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டம்நேற்று நடந்தது. சப்&கலெக்டர் ரஷ்மிசித்தார்த் ஜெகடே தலைமை தாங்கினார். தாசில்தார் ஸ்டெல்லாராணி மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர்.பல்வேறு கோரிக்கைகள் குறித்து விவசாயிகள் 16 மனு கொடுத்தனர். கூட்டத்தின் போது விவசாயிகள் கூறுகையில், “அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் பிஏபி வாய்க்கால் வழியாக விளை நிலங்களுக்கு செல்கிறது. பல்வேறு இடங்களில் அந்த வாய்க்கால்கள் ஓர புறம்போக்கு நிலங்களை பலர் ஆக்கிரமித்து வருகின்றனர்.உடனடியாக ஆக்கிரப்புகளை அகற்ற வேண்டும். விவசாயிகளின் கொப்பரை அட்டை புதுப்பிக்கப்படுகிறது. அதை விரைந்து முடிக்க வேண்டும். அதனால் அதிகப்படியான விவசாயிகள் கொப்பரைகளை ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வர ஏதுவாக இருக்கும். தாலுகாவில் ஒரு சில இடங்களில் அரசு பஸ்களின் இயக்கும் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அரசு பஸ்கள் காலை&மாலை

நேரங்களில் முறையாக இயக்கப்படுவதில்லை. சமீபத்தில் நடந்த ஜமாபந்தியில் விவசாயிகள் மனுக்கள் பல்வேறு கோரிக்கை மனு கொடுத்தனர். அவற்றின் மீது பரிசீலனை செய்யாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.
சூறைக்காற்றால், கடந்த வாரம் குரும்பபாளையம் கிராமத்தில் இருந்த ஆலமரம் ஒன்று வேரரோடு சாய்ந்து விழுந்தது. அதை சிலர் வெட்டி லாரியில் கடத்தியுள்ளனர். கிராமங்களில் நத்தம் புறம்போக்கு இடத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு பட்டா வழக்க தகுதியானவர்களை தேர்வு வேண்டும். கடந்த ஒரு ஆண்டுகளுக்கும் மேலாக, தாலுகா கிராமங்களில் வறட்சி நிலவுகிறது.  அதற்கு நிவாரண தொகை அரசு வழங்க உத்திரவிட்டும், விவசாயிகளுக்கு முழுமையாக கிடைக்கவில்லை. விவசாயமும் பாதிக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு வருமானம் இல்லை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாய பூமியை வைத்து கடன் பெற வேண்டி சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வங்கிகளில் விவசாயிகளுக்கு கூடுதலாக கடன் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட குறைகளின்  மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர். சப்& கலெக்டர் ரஷ்மிசித்தார் ஜெகடே பேசுகையில், "விவசாயிகளின் கோரிக்கைகள் அனைத்தும் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு மாதமும் இங்கு நடக்கும் (சப்&கலெக்டர் அலுவலகம்) கூட்டத்தில் விவசாயிகள் கூறும் கோரிக்கைகளை, அந்தந்த துறை அதிகாரிகள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை வேண்டும். அதிகபட்சமாக 15 நாட்களுக்குள் சம்பந்தபட்ட அதிகாரிகள் பதில் அளிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட பதில் சம்பந்தமான கடிதத்தை உடன் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றார்.

**தென்மேற்கு பருவமழை தீவிரம் பரம்பிக்குளம் அணைக்கு நீர்வரத்து 2115 கன அடியாக அதிகரிப்பு**

பொள்ளாச்சி, : மேற்குதொடர்ச்சி மலையில் பொழியும் தென்மேற்கு பருவமழையால், பரம்பிக்குளம் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. வினாடிக்கு 2115கனஅடி வீதம் தண்ணீர் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.
பிஏபி., திட்டத்திற்குட்பட்ட  ஆழியார், பரம்பிகுளம், திருமூர்த்தி அணைகள் மூலம் கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கடந்த சில வாரங்களாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்துவரும் பருவமழையால், அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்து வருகிறது. கடந்த 2

வாரங்களாக டாப்சிலிப், பரம்பிக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் பரம்பிக்குளம் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு வினாடிக்கு 45 முதல் 60கனஅடி தண்ணீரே வந்து கொண்டிருந்தது. தற்போது பெய்து வரும் பருவமழை காரணமாக பரம்பிக்குளம் அணைக்கு 2115 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் தற்போது 11 அடியாக உயர்ந்துள்ளது. 35 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பல மாதங்களுக்கு பிறகு பரம்பிக்கும் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், வரும் ஆகஸ்ட் மாதம், கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்திக்கு தண்ணீர் திறப்பு இருக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர். தொடர்ந்து சுற்றுவட்டார பகுதிகளில் பருவமழை பொழிந்து கொண்டிருப்பதால், பரம்பிக்குளம் அணை விரைவில் நிரம்பும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

நேற்று பெய்த மழையளவு வருமாறு(மி.மீட்டரில்): மேல்நீரார் & 148, கீழ்நீரார்&142, சோலையார்&114, பரம்பிக்குளம்&127, தூணக்கடவு&68, பெருவாரிபள்ளம்&50, அப்பர்ஆழியார்&8.7, காடம்பாறை&14, நவமலை&6.4, சர்க்கார்பதி&28, மணக்கடவு&37.2,ஆழியார்&6, மாக்கினாம்பட்டி&18.6, வேட்டைகாரன்புதூர் & 12,

**திருச்சியில் காய்கறி விலை சரிந்தது சின்ன வெங்காயம் கிலோ ரூ.20 குறைந்தது**

திருச்சி, : திருச்சியில் காய்கறி விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள் ளது.

மழை இல்லாதது, தண்ணீர் பற்றாக்குறை ஆகியவற்றால் உற்பத்தி குறைந்து, வெளியூர்களில் இருந்து திருச்சிக்கு வரும் காய்கறிகள் வரத்து குறை வாகவே இருந்தது. இத னால் ஒரு மாதமாகவே காய்கறிகளின் விலை அதிகரித்து வந்தது. அத் துடன் திருமண முகூர்த்த தினங்களும் சேர்ந்து கொண்டதால் காய்கறி விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்தது. தற்போது முகூர்த்த தினம் குறைந்ததால், ஒரு சில காய்கறிகளின் விலை யில் சரிவு ஏற்பட்டுள் ளது. ரூ.90க்கு விற்ற கிலோ சின்ன வெங்காயம் ரூ.70க்கும், ரூ.80க்கு விற்ற பீன்ஸ் ரூ.45க்கும், ரூ.70க்கு விற்ற அவரை ரூ.45க்கும், ரூ.30க்கு விற்ற கத்திரிக்காய் ரூ.18க்கும், ரூ.50க்கு விற்ற தக்காளி ரூ.40க்கும் விற்கப்பட்டு வருகிறது. விலையில் எந்தவித மாற்றமும் இல்லாமல் கிலோ இஞ்சி ரூ.200க்கும், சேனைக்கிழங்கு ரூ.35க் கும், சேப்பை கிழங்கு ரூ.45க்கும், கரு ணைக் கிழங்கு ரூ.55க்கும், உரு ளைக் கிழங்கு ரூ.25க்கும், மாங்காய் ரூ.20க்கும், முருங்கைக் காய் ரூ.40க் கும், ரூ.20க்கு விற்ற பெரிய வெங்காயம் ரூ.28க்கும், முள்ளங்கி ரூ. 25 க்கும், முட்டைகோஸ் ரூ.25க் கும், கேரட்

ரூ.45க் கும், பச்சை மிளகாய் ரூ.35க் கும் விற்கப்படுகி றது. ஒரு கீரைக் கட்டு ரூ.10, ஒரு தேங்காய் ரூ.15, ஒரு எலு மிச்சை ரூ.5 வரையிலும் விற்கப்பட்டு வருகிறது.
காய்கறிகள் விலை இனி உயர வாய்ப்பில்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## 2 நாளில் நீர்மட்டம் 1.40 அடி உயர்வு மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 4,351 கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர் : மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளதால் 2 நாளில் நீர்மட்டம் 1.40 அடி உயர்ந்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால், அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் உள்ளிட்ட அனைத்து அணைகளுக் கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.
இதன் காரணமாக, கபினி அணை நிரம்பி உள்ளது. கபினி அணைக்கு விநாடிக்கு 35,000 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் பாதுகாப்பு கருதி, உபரி நீர் முழுமையாக காவிரி ஆற்றில் திறந்து விடப்படுகிறது. இதேபோல், கிருஷ்ணராஜ சாகர் அணையும் நிரம்பும் தருவாயில் உள்ளது. இந்த அணையிலிருந்தும் பாதுகாப்பு கருதி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.
2 அணைகளிலிருந்தும் வெளியேறும் தண்ணீர், கடந்த 2 நாட்களாக மேட்டூர் அணைக்கு வரத்தொடங்கியுள்ளது. கடந்த 25ம் தேதி விநாடிக்கு 80 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று முன்தினம் காலை 1,110 கன அடியாக அதிகரித்தது. நேற்று காலை விநாடிக்கு 4,351 கன அடியாக அதிகரித்தது. கடந்த 25ம் தேதி காலை 15.51 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 16.91 அடியாக அதிகரித்தது.
மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 2 நாட்களில் 1.40 அடி உயர்ந்துள்ளது. நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என்பதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. குடிநீர் தேவைக்காக, அணையிலிருந்து விநாடிக்கு 900 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. நீர் இருப்பு 3.25 டிஎம்சியாக உள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 28.06.2013

**பொத்தனூரில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்**

பரமத்திவேலூர்,

பரமத்திவேலூர் தாலுகா பொத்தனூர் பேரூராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் நாராயணன் தலைமை தாங்கி, ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். செயல் அலுவலர் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். பேரூராட்சி அலு வலகத்தில் தொடங்கிய ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் பேரூ ராட்சி அலுவலகத்தை வந்தடைந்தது.

ஊர்வலத்தில் பொத்தனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகள் 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, "இயற்கை தரும் கொடை மழை சேகரிக்க நமக்கென்ன தடை", "உயிர் களை காக்க மழை நீரை காத்திடுவோம்", "வீட்டில் மரம் வளர்ப்போம் மழைநீர் பெறுவோம்" என்ற கோஷங்களை எழுப் பியும், பொதுமக்களிடம் துண்டு பிரசுரங் கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத் தினர். நிகழ்ச்சியில் துணைத் தலைவர் சுப்பிரமணி, வார்டு உறுப்பினர்கள், பேரூராட்சி பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு காய்கறிகள் கொள்முதல்**

கிருஷ்ணகிரி,

கிருஷ்ணகிரி மாவட்டத் திலிருந்து சென்னையில் உள்ள பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு காய்கறிகள் கொள்முதல் செய்வது குறித்து கலெக் டர் ராஜேஷ் தலைமை யில் ஆய்வு கூட்டம் நடந் தது.

ஆய்வுக்கூட்டம்

சென்னையில் உள்ள பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து கூட் டுறவுத்துறை யின் மூல மாக காய்கறிகள் கொள்முதல் செய் வது குறித்த ஆய்வுக் கூட்டம் கூடுதல் பதிவாளர் கலையரசி முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழக முதல்-அமைச்சர், காய்கறிகளின் விலையைக் கட்டுப்படுத்த நகர்ப்புற பகுதி களில் கூட்டுறவுத்துறை மூலம் விவசாயிகளையும், நுகர்வோ ரையும் நேரடியாக இணைக்க பண்ணைப் பசுமை நுகர் வோர் கடைகளை தொடங்க நடவடிக்கை எடுத்தார். அதன் படி சென்னையில் 31 பண்ணை பசுமைக் கடைகள் முதற் கட் டமாக திறக்கப் பட்டுள் ளது.

காய்கறி கொள்முதல்

இந்த கடைகளுக்குத் தேவை யான காய்கறிகள், மாநிலத்தில் காய்கறி அதிகமாக விளையக் கூடிய மாவட்டங்களில் விவ சாயிகளிடமிருந்து நேரடி யாகக் கூட்டுறவுச் சங் கங்கள் மூலமாக கொள்முதல் செய்யப்படுகிறது. குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காய்கறிகள் அதிகமாக விளை யக்கூடிய ஒசூர் தாலூகாவில் பேரிகை, பாகலூர், செட்டிப் பள்ளி பகுதிகளிலிருந்து முட்டைக்கோஸ், கேரட், குடைபிளகாய், பீட்ரூட், பீன்ஸ், தக்காளி, நூல்கோல் போன்ற காய்கறிகள் பேரிகை, பாகலூர், செட்டிப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளிட மிருந்து நேரடியாக தினந் தோறும் கொள்முதல் செய்யப் பட்டு, சென்னைக்கு அனுப் பப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு உடனடியாக காய்கறிக்கு உரிய விலையும் கிடைக்கிறது. மேலும் இடைத் தரகர்களால் ஏற்படும் இழப்பு களும் தவிர்க்கப்படுகிறது.

கடன் வசதி

இக்கூட்டத்தில் 5200 கிலோ காய்கறிகள் கொள்முதல் செய்து சென்னைக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அவற்றில் பீன்ஸ் 1200 கிலோ, முட்டைகோஸ் 1200 கிலோ, கேரட் 400 கிலோ, குடமிளகாய் 100 கிலோ, பீட்ரூட் 1200 கிலோ, நூல்கோள் 1100 கிலோ உள்ளிட்ட ஆக மொத்தம் 5200 கிலோ காய்கறிகள் ஆகும். மேலும் விவசாயிகள்

மாவட்டத்தில் இருந்து காய் கறிகள் கொள்முதல் படுத்த முன்வரும் விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பாக முன்னுரிமை அடிப்படையில் அனைத்து கடன் வசதிகளை யும் வழங்கப்படும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பிரகாசம், மாவட்ட வழங்கல் அலுவலர் அனந்தகிருஷ்ணன், தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் சீனிவாசன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் மோகன், வேளாண்மைஇணை இயக்குநர் (பொறுப்பு) மாதேஸ்வரன், இணைப்பதி வாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.கிருஷ்ணமூர்த்தி, துணை பதிவாளர் கந்தராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.